NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 22 July 2018

## அமைச்சர் ஓங்: தொழில்துறைகள், வேலைகள் மாறுவதால் மேம்படவேண்டிய தேவை தொடரும்

# பட்டதாரிகள் ஆயுள் வரை கற்கவேண்டியது அவசியம்

இன்றைய பட்டதாரிகள் ஆயுள் முழுவதும் கற்கும் நடைமுறையைத் தழுவிக்கொள்ளவேண்டிய தேவை இருக்கும் என்று கல்வி அமைச்சர் ஓங் யி காங் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

தொழில்நுட்ப நவீனங்கள் பல தொழில்துறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் வேலைகள் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக இன்றைய பட்டதாரிகள் கல்விக் கூடங்களுக்குத் திரும்பவும் செல்லவேண்டிய தேவை இருந்துகொண்டே இருக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

ஆயுள் முழுவதும் கற்க வேண்டியிருக்கும் பட்சத்தில், வேலைக்குச் செல்வதற்கு முன்பாக தேவைப்படக்கூடிய அறிவும் தேர்ச்சியும் என்ன என்று கேட்டால் அதற்கு உடனடி பதில் எதுவும் கிடையாது என்றார் அமைச்சர்.

உலகம் முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் இத்தகைய ஒரு பிரச்சினையையே எதிர்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இருந்தாலும் இதற்குத் தீர்வு காண்பதில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் முன்னணியில் திகழ்கிறது என்றார் அமைச்சர்.



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக விருந்தில் கல்வி அமைச்சர் ஓங் யி காங் கலந்துகொண்டார். **படம்: சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்**

இந்தப் பல்கலைக்கழகத்தின் விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுமார் 350 புதிய பட்டதாரிகள், துறை உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள், இந்நாள் மாணவர்கள், விருந்தினர்கள் ஆகியோர் முன்னிலையில் அமைச்சர் உரையாற்றினார்.

திரு ஓங், கடந்த மார்ச் மாதம் ஒரு புதிய செயல்திட்டம் பற்றி அறிவித்திருந்தார். மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் காலம் முதல் 20 ஆண்டுகள் வரை ஒவ்வொரு மாணவரின் வாழ்க்கைத்தொழில் மற்றும் கற்றல் வழிகளுக்கான திட்டங்களை இந்தப் பல்கலைக்கழகம், அந்தப் புதிய செயல்திட்டத்தின் கீழ் தீட்டுகிறது.

இத்தகைய பயிற்சிகளுக்கு இந்தப் பல்கலைக் கழகத்தின் ஏறக்குறைய 300,000 முன்னாள் மாணவர்கள் தானாகவே தகுதி பெறுகிறார்கள்.

ஆகஸ்ட் முதல் 500 தொடர் கல்வி மற்றும் பயிற்சிகள் பட்டதாரிகளுக்குக் கிடைக்கும்.

இத்தகைய கற்றல் செயல்திட்டங்கள் எல்லாம் உலகிலேயே வேறெங்கும் இல்லாத தனிச்சிறப்புடன் திகழ்கின்றன.

அண்மையில் ரஷ்யாவில் நடந்து முடிந்த உலகக் கிண்ணக் காற்பந்து விளையாட்டுப் போட்டிகளிலிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்களையும், காற்பந்து ரசிகரான திரு ஓங் பகிர்ந்துகொண்டார்.

அந்த விளையாட்டுப் போட்டிகளின்போது முதல்தடவையாக காணொளிகளும் நடுவர்களாகச் செயல்பட்டன.

என்றாலும் இயந்திரங்கள் மனிதர்களுக்கு மாற்றாகாது என்பது தெளிவாகி இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

வெற்றிபெற வேண்டுமானால் சீரிய, சிறப்புத் தன்மைகள் தேவை என்பது உலகக் கிண்ணக் காற்பந்து மூலம் தெரியவந்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பன்மய விளையாட்டாளர்களைக் கொண்டிருந்ததன் காரணமாக பிரான்ஸ் வெற்றிபெற்றது. மன எழுச்சி, ஐக்கியமான நோக்கம், கட்டொழுங்கு ஆகியவற்றின் காரணமாக குரோஷியா எழுந்தது.

இந்தப் பாடங்களை நாட்டு உருவாக்கத்திற்குப் பயன்படுத்தும்படி பட்டதாரிகளைக் கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.